

# யுவதி

காலாண்டு இதழ்

ஜூலை - செப்டம்பர்

2024

/holycrossngl.edu.in



J. Pousha Shani
I Bsc Mathematics









7/7/2024







# தன்னம்பிக்கை

மாபெரும் சக்தி கொண்ட மானிடனே!
மாறி வரும் உலகில் சாதனை செய்திடு!
இன்னல்கள் எதிர்கொள்ள வீறுகொண்டு எழுந்திடு!
இன்பங்கள் பெருகிட வழி பல கண்டிடு!
செய்தோம் என்பதை மறந்திடு–மேலும்
செய்வோம் என்றே துணிந்திடு
தடைகள் வென்று நிமிஉந்திடு
வீழ்ச்சிகள் வந்தால் சோர்ந்திடாதே!
தாழ்ச்சிகள் கண்டு பயந்திடாதே!
சூழ்ந்திடும் சுமைகளை விலக்கிவிடு!
முயற்சிகள் செய்தே வென்றுவிடு!




கூசன் தெரசா
II முதுகலை கணிதத்துறை


# சுயநலம்

அவனைச் சுயநலவாதி
என்ற உறவினரிடம் – மறுத்துக்
கூற இயலாப் பேதையானேன் – ஏன்
என்றால் அவளும் இன்று
உறங்குகிறாள் கல்லறை உலகத்தில்
சுயநலமாக........




வி. மேரிகிரீனா
III B.Sc Computer Science

# கண்ணாடிப் பிம்பம்

நிமிட முள்கள் நகரும் வேளையில் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து கொண்டு விரைவாக நகரும் சாலையின் மத்தியில் அரசுப் பேருந்திற்காகக் காத்திருந்தாள் அவள் நொடிகள் சற்று வேகமாக நகர அவளின் வேலைக்குச் செல்லும் நேரமும் மெதுவாகக் குறைந்தது. இறுதியில் அவள் ஒரு வாடகைக் காரில் ஏறி விரைந்தாள் வேலைக்கு. சட்டென்று வானிலை மாற மழையின் தாக்கம் மண்ணைத் தொட நடுசாலையில் நின்றுவிட்ட அந்தக் காரில் இருந்து இறங்கி ஓடிச்சென்று தன்னை மழை தொடாமல் இருக்க ஏதோ ஒரு குடிசைபோன்ற இடத்தில் ஒதுங்கினாள் அவள். அப்பொழுது திடீரென ஒரு வெளிச்சமான கதவு அவள் கண்முன் வர அதைத் திறந்து கொண்டு உள்ளே சென்றவளுக்கு சிடைத்தது ஆச்சரியம். தன்னை போன்ற ஒரு உருவம் தனக்கு எதிரில் ஒரு கண்ணாடியின் ஒருபுறம் அவள் மறுபுறம் அந்த உருவம். தன்னை போன்ற உருவம் தன் முன் கண்டதை நினைத்து ஆச்சரியம் ஒருபுறம் இது கனவா நினைவா என்ற மனகுழப்பம் ஒருபுறம் அப்படி ஒருநிலையில் அந்த உருவம் அவளைப் பார்த்து நீ தான் நான் ஆனால் நான் நீ இல்லை எனக் கூற அதைக் கேட்டுத் தவித்த அவளின் நிலையைக் கண்டு சிரித்தது அந்த உருவம். அந்த உருவம் சொன்னது ஆம் நான் உன் உருவம் மட்டுமே உன் நல்ல குணம் மற்றும் கெட்ட குணத்தின் ஒரு அடையாளம் நான். நீ செய்யும் நல்லது என்னை ஒரு புறம் வெள்ளை ஆக்குகிறது ஆனால் நீ செய்யும் கெட்டது என்னை ஒரு புறம் கருமை ஆக்குகிறது என்றது. திடீரென அந்த உருவம் ஒரு புறம் வெள்ளையாகவும் ஒருபுறம் கருமையாகவும் மாற அந்தக் கண்ணாடி சற்றென்று உடைந்து விழுந்தது அவள் முன். அதைக் கண்டு கனவில் இருந்து விழித்துக் கொண்ட அவள் திடீரென தான் வீட்டில் இருப்பதையும் தன் அம்மா அப்பொழுதுதான் அவளைத் திட்டிக்கொண்டு தூக்கத்தில் இருந்து எழுப்புவதையும் உணர்ந்தாள். இவ்வாறு தான் சில மனிதர்கள் தான் செய்யும் கெட்டது மற்றவர்களைக் காயப்படுத்தும் என நினைக்கிறார்கள் ஆனால் அவர்களுக்குப் புரிவதில்லை அது தன்னையே அழிக்கும் ஒரு கருவி என.



R. Mary Ronalda
II M.Sc. Mathematics (Aided)



# கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

முன்னுரை:

பெற்ற பிள்ளை உன்னைக் கைவிட்டாலும் கற்ற கல்வி உன்னைக் கைவிட்டாலும் நீ பழகிய கைத்தொழில் உன்னைக் கைவிடாமல் காப்பாற்றும் என்பது ஆன்றோர் வாக்கு கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை இக்கட்டுரை வலியுறுத்தி நிற்கிறது.

கைத்தொழிலின் அவசியம்:

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். புள்ளிக் கணக்கு வாழ்க்கைக்கு உதவாது என்பார்கள். அது உண்மையே நாம் கற்கும் கல்வியும் நம் எதிர்காலத்திற்கு ஒரு தொழில் கற்றுக் கொடுக்கிறதா என்றால் இல்லை. படித்து முடித்து பட்டம் பெற்று பின்னர் வேலை தேடும் போது தான் தெரியும். ஏதாவது ஒரு கைத்தொழிலாவது கற்று இருக்கலாமே என்று யோசிப்போம்.

கைத்தொழில் வகைகள்:

பாய் பின்னுதல் கூடைப் பின்னுதல் அலங்காரப் பொம்மைகள் செய்தல் கைவினைப் பொருட்கள் செய்தல் மின்னணுச் சாதனங்கள் பழுதுபார்த்தல் கைப்பேசி பழுது பார்த்தல் எனப் பலவகைத் தொழில்கள் கைத்தொழிலில் உள்ளன.

கைத்தொழிலின் பயன்கள்:

கைத்தொழில் கற்றால் படித்து வேலை கிடைக்கவில்லையே என்று ஏங்கித் தவிக்கத் தேவையில்லை. கைத்தொழில் கற்ற உடன் வேலை தரும். வீட்டில் உள்ள பொருட்களை நாமே சரி செய்யலாம். கைத்தொழிலை நாம் கற்றும் அதன் மூலம் பிறருக்கு அதனைக் கற்றுக்கொடுத்தும் பொருட்கள் ஈட்டலாம். குறைந்த முதலீட்டில் அதிக லாபம் பெறலாம்.

கைத்தொழிலால் தோன்றிய கல்வி:

தொழிற்கல்விஇ தொழில்நுட்பக் கல்விஇ சிறுதொழில் கல்வி ஆகியவை எல்லாம் கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்டே தொடங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறுதொழில் பயிற்சி குநற்தொழில் பயிற்ச்சிகாகக் கைத்தொழில்கள் பலவற்றை இன்று தொழிற்கல்வி நிலையங்களில் கற்றுக் கொடுக்கின்றனர்.

முடிவுரை:

வறுமையினால் பசி என்று வரக்கூடிய ஒன்றனுக்கு ஒரு மீனைக் கொடுப்பதைவிட மீன் பிடிக்கக் கற்றுக் கொடுத்து ஒரு தூண்டிலை வாங்கிக் கொடுக்கலாம். அதுதான் அவருடைய வறுமையை நீண்டகாலம் போக்கும். இதுதான் கைத்தொழிலின் சிறப்பாகும். கைத்தொழில் கற்போம்! கவலை இல்லாமல் வாழ்வோம்!!

K.HARINI
I B.Sc ZOOLOGY

# ஏக்கங்கள்

ஒரு கிராமத்தில் அண்ணனும் தங்கையும் வாழ்ந்து வந்தனர். இரண்டு பேரும் ஒருவர்மேல் ஒருவர் அளவில்லா அன்பு வைத்திருந்தனர். சிறிது காலம் கழித்து தங்கைக்குத் திருமண வயது வந்துவிட்டது. திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால் அண்ணன் முகத்தில் சிரிப்பே இல்லை. தங்கை தன்னை விட்டுப் பிரியப்போகிறாள் என்ற ஏக்கத்தில் இருந்தான். திருமணமும் முடிந்தது தங்கை தற்போது சென்னை கிளம்ப வேண்டும். அனைவரும் பேருந்து நிலையத்திற்கு வந்தனர். தங்கை அண்ணனிடம் போய் வருகிறேன் என்று சொன்ன

உடன் அவன் கண்களில் தண்ணீர் தாரைதாரையாகக் கொட்டுகிறது. இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டு அழுகின்றனர். தங்கை பேருந்தில் ஏறி புறப்படுகிறாள்.

நாட்களும் செல்கின்றன!........

திடீரென ஒருநாள் அண்ணன் வேலைபார்த்த இடத்தில் பணப்பிரச்சனை இருபது லட்சம் பணம் வேண்டும். தன் தங்கையிடம் சொல்லிப் புலம்பினான். அவள் எதையுமே யோசிக்காமல் தன் அத்தனை நகைகளையும் கொடுத்தாள் அண்ணனின் பிரச்சனை தீர்ந்தது. ஆனால் அவனால் பணத்தைத் திரும்ப கொடுக்க முடியவில்லை. தற்போது பதினைந்து வருடம் ஆகிறது இன்னும் அவள் அதை வாயைத் திறந்து கேட்கவில்லை. தன் அண்ணன் பிள்ளைகளைத் தன் பிள்ளை போல் வளர்தவள் ஊரில் அனைத்து குழந்தைகளுக்கும்
தன் கையால் தொட்டில் கட்டியவளுக்குத் தன்
குழந்தைக்குத் தொட்டில் கட்ட பாக்கியம் இல்லை. ஆம்
எதிர்பார்ப்பின் முழு ஏக்கத்தோடு நிற்கிறது அந்த
நல்ல மனது இன்னும் பல பேருக்கு இருக்கிறது இந்த
**ஏக்கங்கள்!**.............



A.Abisha
I B.Sc Zoology

# இயற்கையின் எழிலழகு

வண்ண வண்ணமாய் மலர்கள்!
எங்கும் நிறைந்த பச்சையம்
மலர்களை மொய்க்கும் வண்ணத்துப்பூச்சிகள்!
ரீங்காரமிடும் வண்ணமயமான வண்டுகள்
எழில் நிரம்பிய சாரல் மழை!
குடையாக நிழலாக மரங்கள்
அலைகள் நிரம்பிய கடல்
நீர் ததும்ப அலை அலையாய்
ஆங்காங்கே நீர்நிலைகள்!
விலங்குகளுக்கும் பறவைகளுக்கும்
நீர் அருந்த அருமையான குட்டைகள்!
பறவைகளின் குஞ்சுகளை
பராமரிப்பதற்கான கூடுகள்
மரத்தின் கிளைகளில்!
எழில் பொங்கும் இயற்கையை
இரசிக்க இச்சமயம் போதாது!



D.A Stefy
II B.Sc English Literature

# தமிழ்மொழி

“ஆயிரம் மொழிகள்” தோன்றலாம்
ஆனால்
‘அம்மா’ என்று ‘
அமுது’ பொங்க
அழைக்க
‘தமிழ் மொழி’ மட்டுமே!!
‘பூமி’ என்னும் தாய்மடியில்
கொஞ்சி தவழ்ந்தது எம்மொழி
‘காலங்கள் மாறலாம்’
காலத்தையே வெல்லும் மொழி
எங்கள் தமிழ்மொழி!!
‘தமிழ் இனம்’ அழிந்தாலும்
‘தமிழர்’ அழிந்தாலும்
அழியாது எங்கள் தாய்மொழி!!
மறப்பதற்கோ! மறுப்பதற்கோ!
இது ‘மொழி’ அல்ல
தாயின் ‘உதிரத்தில்’ இருந்து
“கிடைத்த ‘ஞானம்’
வாழ்க தமிழ்மொழி”!!



S.Mary Mathusha
I B.com (Aided)

# “பெண்”

“சிறகடிக்க ஆசை பறவைக்கு மட்டுமல்ல
பெண்ணுக்கும் தான் உண்டு!!
‘மீசைக்காரனின்’ ‘
அடிமையா’ இவள்
இவளுக்கு ஏன் இருக்கக்கூடாது ‘ஆசைகள்’
செல்வனுக்குரியதா ஆசைகள்?
இறக்க வேண்டியது அவளின்
ஆசைகளை அல்ல
அவனின் ‘தலைகனத்தைதான்’
தாய் தாரம் தங்கை என்ற
நிலைகளில் இருந்து தியாகியாகவும்
உருவெடுக்கிறாள் பெண்!!
“அவளால் தானே பிறந்தாய்
அவளை ஏன் மறந்தாய்?
போற்ற வேண்டாம்
புறக்கணிக்காதே போதும்”!!



S.Mary Mathusha
I B.com (Aided)

# வேடம்

பலர் சிரித்தனர் வேடம் அனிந்து விளையாடிய அந்தக் குரங்கைக் கண்டு, வேடத்தின் உள்ளிருக்கும் கண்களோ ஒருவரை மட்டும் பார்த்து ரசித்தது அவர் சிரிப்பை பார்த்து. எனவே இக்கதை குரங்குக்கும் ரசிகருக்குமானது.

வேடத்தின் உள்ளே வெந்து ரெத்தம் சொட்ட ஆடுவது ஒரு வாய் சோற்றுக்கே நான் ஆடிக்கொண்டிருந்த அந்தத் தெருவில் அனைவருக்கும் நீ இனிப்பு வழுங்கினாய் எனக்கும் உன் கையிலிருந்து கிடைக்காதா என எண்ணிய எனக்கு கேக் கொடுத்தாய்இ குரங்கின் முகத்திரையை அவிழ்த்தேன், நீ என்னைக் கண்டாய்" என்றாய்இ குரங்குக்கும் இறக்கையுண்டா என ஆச்சிரியப்படுத்தியது நம் சந்திப்பு.

குரங்காக வேடம் அணிந்த நான் குரங்குச் சேட்டை செய்யும் போதெல்லாம் வேண்டாம் எனக் கண்டித்தாய். நீ சிரித்து உன்னைப் பார்த்து ரசித்த என்னை சிரிக்கவைத்தாய்

ஒவ்வொரு முறையும் பேசினாலும்
பேசாவிட்டாலும்" இந்த குரங்கைத்
துள்ள வைத்தது. வேடத்தின் வெளியே
எல்லா மிருகமும் சிரிக்கத்தான் செய்யும்
ஆனால் இந்தக் குரங்கு உள்ளேயும்
சிரித்தது நீ இரண்டு குழந்தைகளுடன்
மகிழ்ச்சியாய் உள்ளாய்
என அறிந்ததும்...



**ரோணி**
III B.Sc Computer Science

# வெண்மை



அன்றொரு நாள் வெளியில்
கனத்த மழை பொழிய கணவன்
“நான் நண்பனைக் காணச்
செல்கிறேன் என்று
புறப்பட்டவனை” மனைவியின்
இரு கைகள் தடுத்தும் ஒரு கையைக்
கூட மதிக்காமல் சென்றவன் தன்
இருகால்களால் வெளியில் செல்கிறான்
இரு கால்களோடு சென்றவன் நான்கு கால்களால் வருகிறான்.
காரணம் அவன் இறந்துவிட்டன.
விதியால் அவன் இறக்க பாவம் மனைவியின் விதி முடிந்தது.
பட்டாடை மறுக்கப்பட்டு வெள்ளாடை அணிவிக்கப்பட்டது.
வெண்மை நிறப் பூக்களும் வாடின. ஆபரணங்கள் எல்லாம்
எட்டாக் கனவானது. உடைந்த வளையலின் காயம் ஆறும்
முன் அவள் வயிற்றில் ஒரு உயிர் பிறக்கிறது.
கணவனின் இறப்பால் பல பழிசொற்களைக் கேட்டவருக்கு ஒரு
பேரானந்தம். அக்குழந்தையை வளர்க்க கடின
உழைப்பாளியானாள் சுப காரியங்களில் நடக்கும் அவமானம்
அவனை தற்கொலைக்குத் தூண்ட பிஞ்சு முகம் அதை மறக்க
வைத்தது.
பின்னாளில் அந்த விதவைத் தாயின் மகன் தொழிலதிபர்
ஆகிறான். அவன் ஒரு துணிக்கடை திறப்புவிழா செல்ல பல
ஆடைகள் அவனுக்குப் பரிசளிக்க வரிசையில் நிற்க அவன்
தேர்ந்தெடுத்தான் வெண்நிற ஆடையை. அதைக் கண்ட
தாய் வியந்து நோக்க அவன் கூறினான்.
அனைவருக்கும் வெண்மை என்றால் பரிசுத்தம் அமைதி
நிறம் ஆனால். ஏனக்கு அது என் தாயின் “தியாகம்” என்றான்.
அதுவரை வலி, கண்ணீரை மட்டும் கண்ட தாயின் கண்களில்
ஆனந்தக் கண்ணீர் சொட்டுகள் எட்டிப்பார்த்தன.

குறிப்பு: “வெண்மையை நிறமாக பார்ப்பவர்களுக்குத்
தெரியாது அதனை அனுபவிப்பவர்களின் வலி.”
எனவே மதிப்போம் வெண்மையை நிறமாக அல்ல
உணர்வாக.

**வி. மேரிகிரீனா**
III B.Sc Computer Science



# முதல் சந்திப்பு

என்னவனுடனான முதல் சந்திப்பு
நம் முதல் சந்திப்பு நீங்கா
நினைவாய் அமைய வேண்டும்
என்று அவன் கூறினான்.
இருவருக்கும் பிடித்தமான பூங்காவில்
சந்தித்தோம். கால்கள் களைக்கும்
வரை கதைத்துக் கொண்டே நடந்தோம்.
விரல்கள் வலிக்கும் வரை
பிணைந்து கொண்டோம்.
நிலவின் ஒளியில் கையில் தேநீருடன்
இருவரும் வீதியோர சாலையில் அமர்ந்தோம்.
தெருவில் நடமாடிய நாய் குட்டிகளை
எங்கள் குழந்தைகள் என்று
சொல்லிச் சிரித்தோம்.
யாரும் இல்லா உலகில் நம்மதியாக
வாழ ஆசைப்பட்டோம்.
ஆனால் அவையெல்லாம் ஒரு
இரவு வரை தான் நீடிக்கும்
என்றறியாமல்.

A. Anriya
III B.Sc Computer Science

# இராணுவ வீரன்

வீட்டின் வாசலில் விளையாடியவனை
நாட்டின் வாசல் தன்னைக் காக்க அழைத்ததோ!
கொட்டும் பனியோ அடை மழையோ
ஒருபோதும் சுமையில்லை நாடு காக்கும் காவலனுக்கு
பகை எதிர்த்தவன் கண்களில்
பாசத்திற்காக சிறு கண்ணீர் வீழ்ந்தது.
உண்ண கூட மறந்ததுண்டு ஆனால்
உணவளித்த நாட்டை அல்ல
தேசம் தந்த இவனின் உடல் நாட்டுக்கு
பாசம் தந்த இவன் உயிர் வீட்டுக்கு அவன்
உதிரம் சிந்த என்றும் யோசித்ததில்லை
தாய் நாடு போல எதையும் நேசித்ததில்லை
இவனைப் போற்றி பலரால் எழுதமுடியும்
இவனால் மட்டுமே போற்றும்படி வாழ முடியும்!
என் நாட்டைக் காக்கும் இராணுவ வீரனே
உனக்கு என் வீர வணக்கம்!!!

**ஜெய்ஹிந்த்!**



வி. மேரிகிரீனா
III B.Sc Computer Science

# நிலாவின் ஏக்கம்

நள்ளிரவில் மன அமைதியுடன் தூங்கிய நிலாவுக்கு என்றும் இல்லாமல் ஒரு கனவு ஒன்று வந்தது. அதில் அவள் யாருடனோ நீண்ட நேரம் தன் கல்லூரியில் நடந்த சுவாரஸ்யமான கதைகளைப் பேசுவது போன்றும் அவரைக் கட்டியணைத்து முத்தமிடுவது போன்றும் தெரிந்தது. மேலும் நிலா அவருடன் செல்லமாகச் சண்டை போட்டும் அடம் பிடித்தும் அவளுக்கு விருப்பமானவற்றை செய்வதும் போல கனவு கண்டாள் ஆனால் அவர் யார் என்று அவளுக்குத் தெரியவே இல்லை.

மறுநாள் காலையில் எழுந்த நிலாவுக்கு இது ஒரு புரியாத புதிராகவே இருந்தது. ஏனெனில் நிலாவோடு அவள் அம்மாவைத் தவிர வேறு யாரும் இவ்வளவு நெருக்கமாக இருந்தது இல்லை. ஆனால் நிலா கனவில் வந்ததோ ஒரு ஆண் ஆவார். நிலா தான் கண்ட கனவினை யாரிடமும் சொல்லாமல் தனக்குள் வைத்துக் கொண்டாள். அன்று இரவும் இதே போன்ற கனவு அவளுக்கு வரவே நடு இரவில் எழுந்தவள் தன் கைகளால் முகத்தினை மூடிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள். அவள் தன் கனவில் கண்ட அந்த ஆண் வேறு யாருமில்லை அவள் தந்தை தான். நிலா தந்தை இருந்தும் அவரின் பாசத்திற்காக ஏங்கிக் கொண்டிருந்தாள்.

நிலாவுக்கும் சரி அவள் தந்தைக்கும் சரி இருவருக்கும் ஒருவர் மீது மற்றவருக்குப் பாசம் அதிகம் ஆனால் நிலாவின் தந்தையோ தனக்கு மூன்று பெண் குழந்தைகள் என்பதால் நிலாவின் சிறு வயது முதல் அவரின் பணி காரணமாக வெளிநாட்டிலேயே தங்கி விடுவார். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மட்டும் ஊருக்கு வருவார். விடுமுறைக்கு வந்தாலும் கூட ஊரிலும் வேலைக்கு எங்காவது சென்று விடுவார். அவருக்கும் வேறு வழி கிடையாது. ஆதலால் தான் என்னவோ தந்தையின் அரவணைப்பு இதுவரை நிலாவுக்குக் கிடைக்காமலேயே போய்விட்டது. தன் சக தோழிகள் தங்கள் தந்தையோடு அரவணைப்பில் இருக்கும் போது நிலாவுக்கு அதனைக் கண்டு ஏக்கமாக இருக்கும். அதனால் தானோ நிலா இப்படி ஒரு கனவு கண்டுள்ளாள்.

C. Amala Binisha
III B.Sc Computer Science



என்னவளுடன் இருக்கையில்
வேகமாக கடந்து சென்ற நீ...
அவள் நினைவுகளோடு இருக்கையில்
மட்டும்
ஏன் இவ்வளவு தாமதித்து செல்கிறாய்!
என்னவள் நினைவு உனக்கும்
பிடித்திருக்கா?
என்னவென்று சொல்வதம்மா!
என் இரவுபகல் காதலை?
என்னை பொருத்தவரை
இவ்விரண்டும்
என்மீது காதல் வையப்பட்டவை!
முரணோடு தொடுத்தாய் உன்மீது
என் காதலை!
இன்று விழி திறக்க மறுக்கிறது
என் இறுதி நாளிகை!

உறவுகளின் பிரிவு என்பது
ஒருவகை புத்தகம்!
அதை வாசிப்பவர்களுக்கு
வுலி புரியும்
அந்த உறவின் ஆழம் அறியும்!
வாசியாத் அவர்களுக்கு
அந்த உறவு தேவை இல்லை என்று
தெரியும்!
இப்படி பட்ட வாசகர்களுக்கு
ஊங்களின் புனிதமான உறவை
கொடுக்காதீர்கள்!
இது என் அறிவுரை அல்ல:
வேண்டுகோள்.

C. Amala Binisha
III B.Sc Computer Science



# உணவு



எதற்கு நீ இவ்வுலகில்
உழைக்கின்றாய்?
மூன்று வேளை இந்த வயிற்றை
நிரப்பத்தானே!
பசியின் மருந்து.......
மகிழ்வின் விருந்து......
அதுவே உணவு.
உணவே மருந்து என்பர்!
ஆனால் இப்பொழுது
உணவே நோய்க்கு தொடக்கம்......
நல்ல உணவு உண்டால்
சர்க்கரை கூடிவிடும்......
இயற்கை உணவாய்
இருந்தாய்......
பேக் செய்யப்பட்ட உணவாய்
மாறிப்போனாய்......
செயற்கை உணவாய்
மாறுவாயோ!
அதிசயப் பொருளாய்
மதிப்பவர்களுக்கு......
வீசும் பொருளாய்
மதிக்காதவர்களுக்கு......
பல வேளை
இருக்கின்றவர்களுக்கு......
ஒரு வேளை
இல்லாதவர்களுக்கு......
மருந்தாக
சரியாக உண்பவர்களுக்கு......
எல்லாமாக
நன்கு உண்பவர்களுக்கு......
உணவே வாழ்வு
என்றார்கள்!
உணவு போதும்
என்றார்கள்!
உணவு வேண்டாம்
என்றார்கள்!.......



J. S. Febishajith
I B.Sc Mathematics



# ஆசிரியர்*

அன்னையை போல் பாசம் காட்டி
ஆசானாய் நின்று வழிகாட்டி
இன்ப துன்பத்தில் நம்மோடு நின்று
ஈகை குணத்தை வளர செய்து
உண்மை அறிவை வளர செய்து
ஊக்கம் தனை அளித்து
எறும்பு போல் சுறுசுறுப்பாக இருந்து
ஏணியைப் போல் நின்று நம்மை உயரச் செய்து
ஐயம் தனை நீக்கி
ஒழுக்கம் தனை கற்று தந்து
ஓர் உன்னது உயிர்
நம ஆசிரியர்!

M. K. Aashiha
I B.Sc Mathematics

# மரம்



மரம் ஒரு அழகிய விருந்து!
ஏனென்றால்
அது விரகென வெந்து
உணவு வழிக்கிறது..
மரம் ஒரு உயிர் காப்பான்!
ஏனென்றால்
நாம் அன்றாடும் சுவசிக்கும் முச்சு..
மரமே என் நிழல் கூட
எனக்கு உதவாத போது
நீ எனக்கு நிழலாய் நின்றாய்..
உன்னை மறந்து
என்னை அழித்தேன்!

J. Pousha Shari
I B.Sc Mathematics

# அண்ணன்!

1. ஒரு குடும்பத்தில் மூத்த மகனாக பிறந்து
அனைவரின் எதிர்ப்பார்ப்புகளையும்
சுமந்து
தன்னை மறந்து
தன் இலட்சியங்களை இழந்து
தன் குடும்பத்தை இறுதிவரை
சுமக்கிறவன் தான் அண்ணன்.

2. அண்ணன் என்பவன் ஒரு
தங்கைக்கு இரண்டாம் தந்தை
மட்டுமல்ல... அவனே அவளின்
வாழ்க்கையின் தூனாக நிற்கிறான்...
வாழ்க்கையின் இறுதிவரை!



K.Thahira Sharin
II M.A History

# A Dream, She Won't Forget!

A dream, she will never forget,
As a young girl plays in the meadow,
Carefree, full of life,
Just doesn't give a care for the world.
Enjoying the best moments in her life.
As the breeze pass her long, silky black hair,
As she tucks her hair behind her ear,
Her sisters call out to her to pick the flowers,
Like yellow, pink, red, white roses,
Just laying on the ground waiting to be picked up,
Then, they ran around like wild animals,
Until, it's time to go home.
Her mother cooks her favourite dinner,
Baked beans with bread,
As the aroma spreads across the room,
The children's tummies growl in hunger,
All sit together and have conversations about their day,
They all sat outside their home,
Hugging each other,
While looking up at the starry night,
As the stars twinkle at the children,
While the moon shows off her beauty,
Which amazes her mother.
She looks happy seeing her mother's big smile,
And her mother seeing all
her children's smiles on their faces,
All gets up to wish each other good night!
And it goes on as a cycle,

Soundarya Lakshmi
II B.A English Literature

# Leave Me Alone

Repeatedly, Repeatedly, Repeatedly,
I am saying
Leaves me alone.
Let me relax and sit somewhere alone,
Leave me alone.
Don’t try to rule me,
Leave me alone.
This is not your place,
Leave me alone.
Don’t sit on my head,
Leave me alone.
This is what I want,
Leave me alone.
I have a best solution to solve my problem,
Leave me alone.
Don’t come back again and again,
Leave me alone.
I found a place where I will get peace so,
Leave me alone forever.



Helen A.S Arosha